1982 பிப்ரவரி 11]

தானா? ஆம் எனில், அதைத் திரும்ப நம்முடைய அரசு தனது பொறுப்பிலே எடுத்துக்கொண்டு, பயணிகளுக்குத் தங்கும் வசதி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே மூலக்கேள்வி சென்னையைப் பற்றியது. மதுரையைப்பற்றிய முழு விவரம் இல்லையென்றாலும், உறுப்பினர் சொன்னவாறு எதுவும் நடப்பதாக அரசின் கவனத்திற்கு வரவில்லை. நாம் தான் அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதிலே தவறுகள் நடந்திருக்குமானால், அதைப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும்.

குளச்சல் துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டம்.

*வினா எண். 155—திரு. மி. வின்சென்ட், திரு. டி. மணி, திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு போக்குவரத்துக் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் கல்குளம் தாலுகாவில் குளச்சல் துறைமுகம் விரிவுபடுத்த ஆய்வுப் பணிகள் முடிந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த நிதி ஆண்டில் வேலை ஆரம்பிக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆய்வு முடிந்துள்ளது.

(ஆ) அறிக்கை பரிசீலனையில் உள்ளது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, மோனோசட், சுர்கான், இலுமினேட், ரொட்டைல் போன்ற விலை உயர்ந்த அணு தயாரிக்கும் தாதுக்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இன்று இது மைனர் போர்ட்டாக இருக்கிறது. அதை இன்டர்மீடியர் போர்ட்டாக விரிவுபடுத்த இந்த அரசு மைய அரசை வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, துறைமுகத்தை விரிவுபடுத்த ஆய்வுப் பணிகள் முடிந்ததா என்பதுதான் மூலக் கேள்வி. பொறியியல் பொறியாளர் ஆய்வு செய்து ஏறத்தாழ ரூ. 90,000 செலவழித்து, அதைச் சீரமைப்பதற்காக இப்பொழுது விளக்கங்கள் கொடுத்திருக்கிறார்கள். எதை எதைச் செய்ய வேண்டுமென்று அரசு முடிவெடுத்து, பின்னாலே செய்வதாக இங்கே

[1982 பிப்ரவரி 11

குறிக்கப்பட்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்பணி சேர்க்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு துவக்கி, 1984—85-ல் முடிக்க இருக்கும் இத்திட்டத்திற்கு ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய கருத்தை மத்திய அரசுக்கு மாநில அரசு சொல்லத் தயங்காது.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்கான ஆய்வு நடந்துள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதிலே குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருந்து 1980—81-லே சுமார் ரூ. 20 கோடி மதிப்புள்ள முந்திரிப் பருப்பு அடுத்த மாநிலத்திற்குச் சென்று அங்கிருந்து ஏற்றுமதியாகிறது. அடுத்த மாநிலத்திற்குச் சென்று அங்கிருந்து ஏற்றுமதி ஆவதால், அதன்மூலமாகப் பெறுகின்ற அயல்நாட்டுச் செலாவணியின் பங்கை மத்திய அரசாங்கத்திலிருந்து அடுத்த மாநிலத்தினர் பெற்றுக் கொள்கிறார்கள். எனவே, அந்த அயல் நாட்டுச் செலாவணி நமக்கே கிடைக்க, குளச்சல் துறைமுகம் வழியாக ஏற்றுமதி செய்யஅந்த துறைமுக வேலையைத் துரிதமாகச் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்தக் கருத்துக்களையெல்லாம் மனதிலே கொண்டுதான் இதை வேகமாக செய்ய வேண்டுமென்று சொல்லி, நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். அந்த அறிக்கை இப்பொழுது அரசிடத்திலே இருக்கிறது. அரசு இப்பொழுது அதன்மீது வேகமான நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

திரு. எஸ். ரெத்தினராஜ் : தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகம் ஒரு இயற்கையான துறைமுகம். ஆழமான, இயற்கையான அந்தத் துறைமுகத்தை விரைவு படுத்தினால் மட்டுமே, தொழில் துறையில் மிகவும் பின்தங்கியிருக்கிற அந்த மாவட்டத்திலிருக்கிற முந்திரித் தொழிற்சாலைகளை விரிவுபடுத்தவும், தரமானதாகக் கிடைக்கிற ரப்பரை மூலப் பொருளாக வைத்து, ரப்பர் தொழிற்சாலைகள் அமைக்கவும் அங்கே கிடைக்கிற டிட்டோனியம் மற்றும் அங்கே தயாரிக்கப்படுகிற கயிறுகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் அந்தத் தொழிற்சாலைகளை மத்திய அரசு உதவியோடு அங்கே நிறுவவும், இந்தத் துறைமுகத்தை அங்கே விரிவுபடுத்துவது மிக முக்கியமானது என்ற காரணத்தினால், வெகு விரைவில் அந்தத் துறைமுகத்தை வருகிற ஆண்டில் விரிவுபடுத்த மைய அரசை இந்த அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்

1982 பிப்ரவரி 11]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியதைப் போல இது 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, 50 லட்சம் ரூபாய் செலவழிக்கப் படுவதாக கருத்து சொல்லி இருக்கிறார்கள். 1982–83-லே 15 இலட்சம், 1983–84-லே 15 இலட்சம், 1984–85-லே 20 இலட்சம் செலவழிக்கப்படும் என்ற கருத்தைச் சொல்லி இருக் கிறார்கள். அதைப் படிப்படியாகத்தான் செலவழிக்க முடியும். உடனடியாக வேலை துவங்கப்படுகின்ற வாய்ப்பு இருக்கிறது.

உதகையிலிருந்து விரைவுப் பேருந்துகள் விடும் திட்டம்.

*வினா எண். 156—திரு. கே. உச்சி : மாண்மிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) உதகையிலிருந்து சென்னை, மதுரை, திருச்சி, சேலம் போன்ற ஊர்களுக்கு விரைவு வண்டி விடும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இத் தடங்களில் பேருந்துகளை இயக்க இருக்கிறது.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்தப் பகுதிகளில் பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தன. இடை யிலே அவற்றை நிறுத்தி விட்டார்கள். அதை உடனடியாக விடுவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், இப் போது நம்மிடத்திலே இருக்கின்ற சாதாரண பேருந்துகள் மலைப் பகுதியில் போக முடியாது. அப்படி மலைப் பகுதிகளிலே ஓடுவதற்குத் தேவையான அமைப்புகளை உடைய பேருந்துகளை வாங்க அரசு நடவடிக்கை எடுத்து, அவைகளை வாங்கி, கூண்டு கட்டுவதற்காக விட்டிருக்கிறது. அந்த வேலை முடிந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் திருப்தி யாகும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.